
பரிசுத்த பவுல் ஆலயம்,குவைத்
அஹமதி தமிழ் திருச்சபை
43 ஆவது ஆண்டு விழா சிறப்பு மலர்
ஆண்டு விழா வாக்குத்தத்தம்
...உங்களில்
ஆவியைக்
கட்டளையிடுவேன்;..
எசேக்கியேல் 37:6
43 rd
Anniversary

# கடந்த வருடம் நம் சபையில் வந்து ஊழியத்தை நிறைவேற்றிய இறை ஊழியர்கள்











## கடந்த மாத நிகழ்வுகள் ஒரு சில உங்கள் பார்வைக்கு










## சபை ஊழியரின் அன்பு மடல்



## உங்களில் ஆவியைக் கட்டளையிடுவேன்

கிறிஸ்துவிற்குள் அன்பான திருச்சபை குடும்பத்தாரே எல்லாம் வல்ல இறைவன் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் எல்லோரும் நலமாக இருப்பீர்கள் என்று விசுவாசிக்கிறேன். என்னுடைய ஆவலும் அனுதின ஜெபமும் அதுவே.

கடந்த அக்டோபர் மாதம் முழுவதும் நம்மை கண்மணி போல வழி நடத்தின தேவன் வரும் நவம்பர் மாதத்திலும் நம்கூட இருந்து நமது திருச்சபையை சகல ஆசீர்வாதங்களையும் தந்து திருப்திபடுத்தி வழி நடத்துவாராக.

கடந்த 43 வருஷங்கள் நம்மை கண்மணி போல வழி நடத்தின தேவன் வரும் காலங்களிலும் நம்மோடு இருந்து நம்மை கரம்பற்றி வழி நடத்துவார். இந்த வருட ஆண்டு விழாவிற்கு கர்த்தர் கொடுத்திருக்கிற வாக்குத்தத்தம் “நான் உங்கள் மேல் நரம்புகளை சேர்த்து உங்கள் மேல் மாம்சத்தை உண்டாக்கி உங்களை தோலினால் மூடி உங்களில் ஆவியைக் கட்டளையிடுவேன். அப்பொழுது நீங்கள் உயிரடைந்து நான் கர்த்தர் என்று அறிந்து கொள்ளுவீர்கள” என்று உரைக்கிறார் என்று சொல். (எசேக்-37:6)

ஆம் மெய்யாகவே கர்த்தர் நமக்கு ஆவியைக் கட்டளையிட்டு ஒரு பெரிய எழுப்புதலை வரும் ஆண்டிலே கட்டளையிடுவார். அவர் வாக்கு மாறாதவர்.

கர்த்தருடைய ஆவி சபையில் ஊற்றப்படுகின்ற பொழுது என்னென்ன நடக்கும் என்பதைக்குறித்து கீழ்வரும் பகுதிகளில் விளக்கமாக பார்க்கலாம்.

### 1.நரம்புகள் சேரும்...

“இதோ சகோதரர்கள் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்தனை நன்மையும், எத்தனை இன்பமானது. அது ஆரோனுடைய சிரசின் ஊற்றப்பட்டு அவனுடைய தாடியிலே வடிகிறதும் அவனுடைய அங்கிகளின் மேல் இறங்குகிறதுமான நல்ல தைலத்திற்கும் எர்மோன் மேலும் சீயோன் பர்வதங்கள் மேலும் இறங்கும் பனிக்கும் ஒப்பாயிருக்கிறது. அங்கே கர்த்தர் என்றென்றைக்கும் ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் கட்டளையிடுகிறார்” (சங்கீ:133-1-3)

கர்த்தருடைய உயிர்ப்பிக்கிற ஆவி சபையில் ஊற்றப்படுகின்றபொழுது விசுவாசிகள் அனைவரும் உடலின் நரம்புகளைப் போல பின்னி பிணைந்து ஒருமுகப்படுவார்கள். அப்பொழுது ஒரே விசுவாசம், ஒரே தரிசனம், ஒரே குறிக்கோள் அனைவருக்குள்ளும் காணப்பட்டு ஒற்றுமையாய் ஐக்கியமாய் பிதா குமாரன் பரிசுத்த ஆவியாகிய மூவொரு கடவுளோடு இசைந்து செயல்படுவார்கள்.

ஆண்டவருடைய சிந்தை விசுவாசிகளுக்குள்ளும் காணப்படும். ஆண்டவரில் காணப்படும் தியாக உணர்வு எல்லோருக்குள்ளும்உண்டாகும்.அப்பொழுது எல்லோரும் ஓரவரகொருவர் உண்மையாய் நேசித்து அன்பு காண்பிப்பார்கள். அங்கே கர்த்தர் என்றென்னறைக்கும் ஆசீர்வாதத் தையும் ஜீவனையும் கட்டளையிடுகிறார். ஆம் நரம்புகள் ஒன்றிணைகின்ற பொழுது ஆசீர்வாதமும் வாழ்வும் உண்டாகிறது. அல்லேலூயா.

### 2 .மாம்சம் உண்டாகும்......

இது விசுவாசிகளிடையே தோன்றும் மறுரூபத்தை குறிக்கிறது. “ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்ஜியத்தை காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்கு சொல்லுகிறேன்” என்று இயேசு கூறினார்.(யோவா-3:3) “ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் எல்லாம் ஒழிந்து போயின எல்லாம் புதியதாயின”(2-கொரி-5:17)

இயேசு ஒரு பிள்ளையை தம்மிடத்தில் அழைத்து அதை அவர்கள் நடுவே நிறுத்தி நீங்கள் மனந்திரும்பி பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால் பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள்.(மத்-18:3) கர்த்தர் நம் ஒவ்வொருவரையும் தமது சாயலாக மறுரூபப்படுத்துவார். பழைய மாமிசத்துக்குரிய சிந்தைகளெல்லாம் அழிந்து எல்லோரும் புதிதாய் பிறந்த குழந்தைகளைப் போல மறுரூபமடைந்து நீதியின் வாழ்க்கைக்கு அர்ப்பணிக்கிற அனுபவத்தை நம் ஒவ்வொருவருக்கும் தருவார்.

அந்தப்படி முந்தின நடக்கைக்குரிய மோசம் போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்து போட்டு உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள். (எபேசி 4:22-24)

### 3. தோலினால் மூடப்படுவர்...

இது விசுவாசிகளிடையே காணப்படும் சாட்சியின் வாழ்க்கையை குறிப்பிடுகிறது. "நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாயிருக்-கிறீர்கள். மலையின் மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்க மாட்டாது. விளக்கை கொளுத்தி மரக்காலால் மூடி வைக்காமல் விளக்கின் தண்டின் மேல் வைப்பார்கள். அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும். இவ்விதமாய் மனுஷர் உங்கள் நற்கிரியைகளை கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாக பிரகாசிக்ககடவது. (மத்-5:14-16) இதுவே தோலினால் மூடப்படுகிற அனுபவம். எப்படி தேவ சமூகத்தில் தரித்திருந்த மோசேயின் முகத்திலே பிரகாசமான ஒளி காணப்பட்டதோ அதே விதமான மகிமையின் ஒளியை தேவன் நம் உடலில் கொடுப்பார்.

இரத்த சாட்சியாய் கல்லெறியப்பட்டு ஆண்டவரிடம் தன் ஜீவனையே ஒப்புக்கொடுத்த ஸ்தேவான் நியாய சபையில் நிற்கின்றபொழுது பிரகாசித்த அதே ஜீவ ஒளி விசுவாசிகளாகிய நம்முடைய முகத்திலும் பிரகாசிக்கும். இதுவே தேவன் நமக்கு அருளும் மகிமையின் தோல். தேவன் ஒளியாயிருக்கிறார் அவரில் எவ்வளவேனும் இருளில்லை. இது நாங்கள் அவரிடத்தில் கேட்டு உங்களுக்கு அறிவிக்கிற விசேஷமாயிருக்கிறது. அவர் ஒளியிலிருக்கிறது போல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம். (1-யோவா:1-5,7)

இந்த ஜீவ ஒளிதான் தரிசனம் தந்து சவுலை பவுலாக மாற்றியது. சடிதியிலே வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றி பிரகாசித்தது. (அப்-9:3)

பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும் சமாரியாவிலும் பூமியின் கடைசி பரியந்தமும் எனக்கு சாட்சிகளாய் இருப்பீர்கள் (அப்:1:8) இப்படி விசுவாசிகளாகிய நாம் நடமாடுகிற இடங்களாகிய குடும்பம், சபை, அலுவலகம், வசிக்கிற ஸ்தலம், சமுதாயம், நட்புகள், உறவுகள் மற்றும் நம்முடைய தனிப்பட்ட பரிசுத்த ஆவிக்குரிய ஜீவியத்திலும் இயேசுவை பிரதிபலிக்கிற உன்னத சாட்சியின் வாழ்க்கையை நம் சரீரத்திலே பிரதிபலிக்க ஆண்டவர் கிருபை தருவார்.

நம் சரீரத்தில் காணப்பட்ட பழைய அந்தகார இருள் நீங்கி ஜீவ ஒளியை நாம் சுதந்தரித்துக்கொள்வோம். பரிசுத்த ஆவியா-னவர் நம் சபையில் இறங்கி வருகின்றபொழுது இப்படிப்பட்ட சாட்சியின் ஒளி நம் ஒவ்வொருவரிடத்திலும் காணப்படும். இதுவே ஆண்டவர் நம் சபைக்கு அருளுகிற வாக்கு தத்தம்.

இப்படியாக வருகிற 44-வது ஆண்டு முழுவதும் நம் சபையை நரம்புகள் போல ஐக்கியத்தைத் தந்து, புதிய மாம்சத்தினால் மறுரூபமாக்கி, புதிய தோலாகிய ஒளியுள்ள சாட்சியின் வாழ்க்கையை ஈந்து தேவ நாம மகிமைக்காக வாழ்கிற அர்ப்பணிப்பின் ஜீவியத்தை நமக்கு தந்து எல்லாவிதமான ஆசீர்வாதங்களுக்குள்ளும் நம் ஒவ்வொருவரையும் அதிகாரமுள்ள ஜீவாதிபதியாகிய தேவாதி தேவன் இயேசு கிறிஸ்து நிச்சயமாக வழி நடத்துவார்.

தர் தாமே உங்கள் ஒவ்வொருவரையும் விசேஷித்த கிருபைகளைத் தந்து புதிய வருஷத்திற்குள் பிரவேசிக்க அருள் புரிவாராக.

சபையோர் அனைவருக்கும் 43-வது வருட ஆண்டு விழா வாழ்த்துக்களையும் ஆசீர்வாதங்களையும் உரித்தாக்குகிறேன்.

கர்த்தருடைய அருளும் ஆசியும் கிருபைகளும் உங்கள் ஒவ்வொருவரையும் நிறைத்து வழி நடத்த ஆசீர்வதிக்கிறேன்.

இப்படிக்கு

கிறிஸ்துவின் பணியில்

உங்கள் அன்பு சகோதரன்

S. ஸ்டாலின்

## இதய நினைவுகள்

நினைத்து பார்க்கின்றேன் என்னவென்று தெரியாமல் கண் கலங்கி அலைந்த நாட்களை. குவைத் தேசத்தில் எங்கு செல்கின்றோம் என்று தெரியாமலே பொழுதுகளை கழித்த நாட்கள் உண்டு. நடந்த பாதைகளில் பாசம் காட்ட யாரும் இல்லை. பசியின் களைப்பு பாதை தடுமாறிய மயங்கிய நிலையில் அமர்ந்த இடமோ அது அகமதி தமிழ் திருச்சபை. அப்போது உன் வார்த்தையை கேட்கின்றேன். நானே வழி நானே சத்தியம் நானே ஜீவன் வழி தெரியாமல் ஜீவன் போகும் நேரத்தில் உம் வார்த்தை என்னை உயிர்ப்பித்தது.

மனதில் உறங்கி கிடந்த அர்த்தமற்ற கனவுகள், இருள்கள், பாரங்கள் எங்கோ போயின என்பதை உணரும் போது என் உள்ளத்தில் உண்டான பெரும் மகிழ்ச்சியை உணர்ந்தேன்.

நெஞ்சம் நிறைய கொஞ்சம் குறையா அன்பு குணம் கொண்டு வீசும் தென்றலாய், விடியல் வெளிச்சமாய் என்றென்றும் உறுதுணையாய் உம் விழியின் முன் எங்களை நறுத்தி உயர்த்துகின்ற அகமதி திருச்சபையே உம்மை வாழ்த்துவதற்கென்று தூய வார்த்தை நல் தமிழில் தேடினேன். வார்த்தை கிடைக்கவில்லை ஏன் என்றால் நீரே அந்த வார்த்தை. அதனால் என் மனதையே தூதனுப்பினேன் இந்த வாழ்த்தின் வழியாக.

43-வது ஆண்டு நிறை விழா காணும் அகமதி தமிழ் திருச்சபையையே நீர் தலைமுறை தலைமுறைக்கும் மனதோடு உறவாடி நிறைகுடமாய் நீடூழி வாழ வாழ்த்தும் ..

கிறிஸ்துவக்குள் அன்பான

ஸ்டீபன்
குடும்பத்தார்

## Happy Anniversary

## My Angel Long Live

My angel is my church. God sent me an Angel from above to mend me as God's child, to love others as my own to guide me the path I should choose to grow. To protect me from these worldly scares to lead me the way to meet my heavenly father.My angel my church called Ahmadi Tamil Congregation.

Selvan **Adreil Kemuel Dhas**

## My Church

My Church

Ahmadi Tamil Congregation was chosen as a place of worship on this earthly home along with my parents family and friends which guides me leads me help me find the way to Jesus to live with him some day.

Happy Anniversary My dear Church

Selvi -**Andrea Magdalene Dhas**

## வாழ்கை

விமானத்தில் நாம் சென்று கொண்டு இருக்கும் போது, இந்த பயணம் எனக்கு பிடிக்கவில்லை என்று சொல்லி, நாம் இறங்க முடியாது, அதே போலதான் உன் வாழ்கையில் உனக்கு பிடிக்காத சில விஷயங்கள் நடக்கலாம், அதற்காக நீ சோர்ந்து போகாதே, இயேசுவின் சித்தம் இல்லாமல் உன் வாழ்கையில் எதுவும் நடக்காது, கவலைப்படாதே.

விதி பெரியது,
அதன் முன் மதி சிறியது,
மதி கொண்டு விதிமாற்ற எண்ணாதே,
விதி தரும் துயரம் கண்டு துவளாதே,
மதிந்த இயேசுவின் முன் மண்டியிடு,
விதி மாற்றித்தருவார் நீ விழித்தெழு,

கர்த்தர் உன்னைக்
காக்கிறவர், கர்த்தர்
உன் வலது பக்கத்திலே
உனக்கு நிழலாயிருக்கிறார்,
சங்கீதம்-121.5

உன் கண்ணீர் வீணாக போகாது,
உன் நிலை தேவனுக்குத், தெரியும்,
கலங்காதே கர்த்தரை மாத்திரம் நம்பு
பதில் சீக்கிரமாய் உன்னைத் தேடி வரும்.
-

சகோதரி. விஜயகுமாரி






# Voice of Praise Ministries




தேவனுக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் ஊழியக்காரனாகிய பாஸ்டர். ஜெபசுந்தர் 43-வது ஆண்டு விழாவை ஆசரிக்கும் அஹமதி தமிழ் திருச்சபையின் ஊழியர்கள் விசுவாசிகள் யாவருக்கும் வாழ்த்துதல் சொல்லி எழுதுகிறதாவது.

கடந்த ஆண்டு இந்நேரம் உங்களோடு இருந்தது என் நினைவுக்கு வருகிறது. மறக்க முடியாத ஆண்டு தேவன் கொடுத்த வாக்குத்தத்தம் உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குள்ளே இருக்கிறார் என்ற வார்த்தையின் படி தேவன் உங்களுக்குள்ளே இருந்து காரியங்களை வாய்க்கப்பன்னி, கீர்த்தி தேசம் எங்கும் பரவி, விருத்தி உண்டாக தேவன் செய்திருப்பார் என்று விசுவாசிக்கிறேன்.

இந்த 43-ம் ஆண்டு நிறைவில் தேவன் கொடுத்திருக்கும் . . . உங்களில் ஆவியைக் கட்டளையிடுவேன் என்ற வார்த்தைக்காய் தேவனைத் துதிக்கிறேன். ஏனென்றால் சபை வளர்ச்சிக்கும் மந்தையின் பெருக்கத்திற்கும் விசுவாசிகளின் உயர்வுக்கும் ஆவியானவருடைய ஒத்தாசை தேவை. இந்த புதிய ஆண்டில் ஆவியானவர் சபைக்குள் விசுவாசிகளுக்குள் இருக்கும் போது நடக்கும் காரியங்கள் என்ன என்பதை தியானிப்போம்.

**1. விடுதலை தந்து நடத்துவார்**

கர்த்தரே ஆவியானவர் கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுண்டு. (2 கொரி. 3:17)

**2. போதித்து நடத்துவார்**

என் நாமத்தினாலே பிதா அனுப்பப் போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்கு போதித்து நான் உங்களுக்கு சொன்ன எல்லாவற்றையும் நினைப்பூட்டுவார். (யோ. 14:26)

**3. கண்டித்து உணர்த்தி நடத்துவார்**

அவர் வந்து பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாத்தீர்ப்பைக் குறித்தும் உலகத்தை கண்டித்து உணர்த்துவார். (யோ. 16:8)

**4. ஜெபிக்க உதவி செய்து நடத்துவார்**

அந்தபடியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக் கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால் ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார். (ரோமர் 7:26)

ஆகவே கடந்த கால சாதனைகளில் களிகூர்ந்து இருக்கிற வண்ணமாகவே இருப்போம் என்று கூர்மழுங்கிய ஆயுதமாக, தேங்கி விட்ட குட்டையாக இராமல் காலத்தின் வேகத்தை அறிந்து இயேசுவின் வருகைக்கு சபை ஆயத்தப்பட பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக் கொள்ளாமல் சேவகமெழுதிக் கொண்ட எஜமானனைப் பிரியப்படுத்த நல்ல போர்சேவகராய் தீங்கனுபவித்து தியாகத்தோடு செயல்பட விரைந்தெழுவோமாக!

இம்மட்டும் நடத்திய எபிநேசரே, இன்னமும் வழிநடத்தும் இமானுவேலராயிருப்பதற்க்காக நன்றி என்று கூறி நல்லது உத்தமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே . . . உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்ற பாராட்டுரையை மட்டுமே எதிர்பாா்த்து தீவிரமாக செயல்பட நம்மை சபையாய் அர்பணித்து இப்புதிய ஆண்டை தொடருவோமாக! தேவ கிருபை உங்களோடிருப்பதாக!

கிருஸ்துவின் பணியில்

உங்கள் அன்பு ஊழியன்





ஜெபசுந்தர்

தக்கலை, கன்னியாகுமரி

தமிழ்நாடு, இந்தியா

Cell : 9865138041

Email:voiceofpraiseministries@gmail.com

## நடத்தி வந்த தேவனுக்க ஸ்தோத்திரம்

(சங்கீதம் 100 அடிப்படையில் எழுதப்பட்டது)

அகமதி தமிழ் சபையே!
நீ கெம்பீரமாய் பாட்டுப் பாடி வா!
பரிசுத்த மணவாட்டியாய் நீ
கர்த்தரையே ஆராதிக்க வா!

மகிழ்ச்சியோடே ஆராதனை செய்திடுவோம்!
ஆனந்த சத்தத்தோடே சந்ததி முன் வந்திடுவோம்!
நாற்ப்பத்து மூன்று ஆண்டுகள் காத்தாரே!
நாளும் முன்னேற உதவி செய்தாரே!

மனிதனல்ல தேவனே உண்டாக்கினார்!
மேய்ப்பனவர் - ஆடுகள் நாம் தானே!
நாற்ப்பத்து மூன்று ஆண்டுகள் காத்தாரே!
பசும்புல் பாதையில் நடத்தினாரே!

வாசல்களில் - துதியோடு நுழைத்திடுவோம்!
பிரகாரங்களில் புகழ்ச்சியாய் பிரவேசிப்போம்!
நாற்ப்பத்து மூன்று ஆண்டுகள் காத்தாரே!
இயேசு நாமத்தையே சொல்லி சொல்லி துதிப்போமே!

காத்தர் நல்லவர் - அவர் கிருபை என்றுமுள்ளது!
அவர் உண்மை – தலைமுறைக்கும் என்றுமுள்ளது!
நாறப்பத்து மூன்று ஆண்டுகள் காத்தாரே!
தலைமுறை பலகாணச் செய்தாரே!

இனிய பல வாழ்த்துக்களுடன்

சகோதரி. சிநேகலதா கிருஸ்டோபர்

## வாழ வைக்க வாழ்ந்திடு!!!

வாழ்ந்திடு! வளர்ந்திடு!!
இருளை பகலாய் மாற்றிடு!
இறைவனின் கிருபையால்
தலை முறை பல கண்டு மகிழ்ந்திரு!

பாவ இருளில் வசிக்கும் மாந்தர்
வேத வெளிச்சம் கண்டு மாறனும்!
தீமை செய்யும் கரங்கள் எல்லாம்
வேதம் சுமந்து சபைக்கு வரனும்!

புறப்படு ! புறப்படு!!
புயலாய் இன்றே புறப்படு !
இயேசுவின் அன்பினை
அறியாதோர் ருசித்திட சொல்லிடு !!

பாவ வழியில் சிக்கி தவிப்போர்!
இன்றே விடுதலை அடையனும்!!
பரமனின் அழைப்பிற்கு
செவி சாய்த்து அடி பணியனும்!!

இளைஞனே ! யுவதியே !!
இயேசுவை அறிவிக்க புறப்படு!
அஹமதி தமிழ் திருச்சபையில்
தினம் ஆத்துமாக்களை சேர்த்திடு!!

தனிமை சிறையில் தவிப்போர்
இனி மகிழ்ந்து துதி பாடனும்!
இயேசுவின் அன்பினை
தம் சபையில் கண்டு மகிழனும்!!

அஹமதி தமிழ் சபையே நீ
வாழ்ந்திடு! வளர்ந்திடு !! ஆயிரமாய் பெருகிடு!!!
விதைத்திடு ! வேத வசனத்தை !!
விண்ணகம் இராஜ்ஜியம் கட்டிடு!!!

இனிய நல்வாழ்த்துக்களுடன்
கேம்ப் ஊழிய பொறுப்பாளர்

ஜா. கிருஸ்டோபர் தேவராஜ்

Happy Anniversary
Ahmadi Tamil Congregation
Praise the Lord

What a gift is to celebrate 43 years of love and togetherness. How precious is to remember all the years we have left behind as we welcome each new blessing with faith and friends and family we laid a firm foundation for the future generations to come the story of our past is now a beautiful memory to be cherished as along our souls complete each other as we form Ahmadi Tamil Congregation what a gift is to celebrate 43 years of Love and togetherness

Sis Maria Glory Dhas

## திருச்சபையே உன்னை வாழ்த்துகிறேன்

அன்பு திருச்சபையே
ஆணவ பெருந்தகையே
இன்னிசை இளவலே
ஈகையின் தாயுமானவனே
உன்னதமானவனே
ஊக்கத்தின் திருமருந்தே
எங்களை வாழ வைத்த
ஏற்றமுறு என் உயிரே
ஐயம் உற்ற வேளையில்
ஒளி விளக்காய் வெளிச்சம் தந்து
ஓடிவந்து அறவனைக்கும் திருச்சபை உறவுகளுக்கு
என் குடும்பத்தின் சார்பாக வாழ்த்துக்கள்!!!!

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரர் ஜெயசேகர் அவர்கள் குடும்பம்

## உயிர் எழுத்தில் அஹமதி தமிழ் திருச்சபைக்கு வாழ்த்து

அந்நிய தேசத்திலும் எம் மொழியாம் தமிழ் மொழியில்
தேவனை பறைசாற்ற!!!
ஆயிரம் ஆத்துமாக்களை எழுப்பியது அவர் தம்
பணியாற்ற!!!
இல்லத்தை விட்டு ஏக்கத்துடன் ஜீவிக்கும்
ஆத்துமாக்களின் துயர் நீக்க!!!
ஈன்றெடுத்த மழலைகளின் வாழ்வில் ஒளி சேர்க்க!!!
உன்னத பெரும் சாட்சியாய் உம் ஜனங்கள்
ஜீவிக்க!!!
ஊழியம் பல தந்து உம்மை அறியா மானிடரை
மீட்டெடுக்க!!!
எண்ணிலடங்கா ஸ்தோத்திரங்களை
எவ்வேளையிலும் ஏறெடுக்க!!!
ஏற்ற தாழ்வுகள் இல்லாமல் ஒரே சரீரமாய்
வாழ்ந்திருக்க!!!
ஐக்கியத்துடன் உம் அண்டை சேர்ந்து
தேவ பிரசன்னம் அனுபவிக்க!!!
ஒப்பற்ற செல்வமான உம் வார்த்தையை அனுதினம்
தியானிக்க!!!
ஓங்கி வளர்ந்து பல நூறு வருடங்களை
கண்டுகளிக்க!!!
ஔவியம் பேசாது வாழ வகுக்கும் எங்கள்
திருச்சபைக்கு நாற்பத்து மூன்றாம் ஆண்டிற்க்கான
வாழ்த்துக்கள் கூறுவது எங்கள் பொறுப்பு!!!
உயிர் எழுத்தில் உன் புகழ் மணக்க வாழ்த்துவது
எம் தாய் மொழியின் தனிச்சிறப்பு!!!

**சகோதரி. லீம்சியா ஜினு**

## 43 ஆம் ஆண்டிற்காண வாழ்த்து

தினம் தினம் தேவ சமூகத்தில் தரித்திருக்கும்
ஒழுக்கம் பல தந்து
திருவசனம் வழியாய் தகாதவைகளை தள்ளிட!!!
தமக்கென வாழாமல் கிறிஸ்துவுக்காய்
வாழும் மனதை தந்து
தூபமாய் எங்கள் வாழ்க்கை இயேசுவே
உம் நறுமணம் வீசிட!!!
தூங்கி தூங்கி பெலனை இழந்து
சோர்வுற்று கிடந்த போது
தூக்கத்தை கலைத்து துதியோடு
ஜெபத்தில் வாலிபத்தை காத்திட!!!
பரிசுத்த ஆவியானவரின்
ஆளுகைக்குள் ஊழியத்தை தந்து
தீபமாய் எரிந்து கர்த்தரின் பணிக்காய்
நித்தமும் வாழ்ந்திட!
அர்த்தமற்று அலைந்து திரிந்த
வேளை உம் அழைப்பை தந்து
பரணி எங்கும் உம் வார்த்தையை கொண்டு
சேர்த்திட !!!
கர்த்தர் கொடுத்ததோர் அன்பின் வழியில் ஒரு சபை
அதுவே எங்கள் அஹமதி தமிழ் திருச்சபை!!!

இனிய நல்வாழ்த்துக்களுடன்
வாலிபர் ஐக்கிய குழு சார்பில்
இணையதள ஊழிய பொறுப்பாளர்

**சகோதரர். ஜினு**

## அரூபியே! சொரூபியே!
## எங்கள் அஹமதி திருச்சபையே நீ!

அண்டினோர்கெல்லாம் அன்னையாய் அரவணைக்கும் தந்தையாய் இறைமை போதிக்கும் ஆசானாய் எங்கள் இன்னல் தீர்க்கும் இறைவனாய் இந்த (குவைத்) மண்ணில் உருவெடுத்து மாந்தரின் மனதில் குடிபுகுந்தாய். நாற்திசையெங்கும் மங்கா ஒளிவீசி அகவை நாற்பத்தி மூன்றில் அடியெடுத்தாய்.

கலங்கிய விழியோடே வந்தாலும் கஷ்டம் உனக்கில்லை என உரைத்தாய்! கண்ணீர் துடைத்திடும் பல உள்ளம் கண்ணெதிரே நீ தந்தாய்! கெட்ட குமாரனாய் வந்தாலும் கட்டி அணைத்து அரவனைத்தாய்! கட்டுகள் அனைத்தும் அவிழ்த்துவிட்டு கரத்தினில் ஏந்தி தாங்குகின்றாய்!

எத்தனை எத்தர்கள் எனிலுண்டு எனினும் கவலை கொள்ளாது! எத்தனை இடர்கள் வந்தாலும் என்னை மீட்டிட நீயுண்டு! வறுமை என வரும்போதும் நான் வருத்தங்கள் பல படும்போது கர்த்தரின் வல்லமை உந்தன் துணை கொண்டு வருத்தாய் வழிகள் எனக்கென்று! சங்கம் வளர்த்த தாய்மொழியில் சாலவும் எம்மை தொழவைத்தாய்! சான்றோர் பலர் உருவாக்கி – நீ சாதனை நாளும் படைத்திட்டாய்!

எத்தனை (விலையுயர்ந்த) கற்கள் உணிலுன்டு என்னிடவோ என்னம் எனில் இல்லை. அத்தனையும் சொக்க இரத்தினமாம் அவை கொண்டு அமைந்த திருச்சபைக்கு வாழ்த்து சொல்ல வயதில்லை வாழ்த்தாமல் இருக்க மனமில்லை. வாழ்க நீயும் பல்லாண்டு என வாழ்த்துகிறோம் உம் குணம்கொண்டு.

கிறிஸ்துவக்குள் அன்புடன்
**ஜான்ஸன் குடும்பத்தார்**

## 43-வது நிறைவு என்பது முடிவல்ல....

நாற்பத்தி மூன்றாவது ஆண்டின
நிறைவைக் காணும்
எனதருமை அஹமதி தமிழ் திருச்சபையே
ஆயிரம் நாமங்களைக் கொண்டவரும்
அன்டசராசரங்களை படைத்தவரும்
அகிலத்தை ஆள்பவருமாகிய
என் தேவாதி தேவனை
புகழ்ந்து போற்றும் புன்னிய ஸ்தலம் நீ.....

எங்கு சென்றாலும் தீராத கர்ம வினை
ஆனால் உம்மை தொழுது கொள்ளும் போது
தீர்ந்துவிடும்
தொடராது உம்மில் பயம் கொள்ளும்போது
தலைமுறைதோறும் இரக்கம் செய்வது
உமது கிருபை
உம்மை அன்டிக்கொள்ளும் போது தருவீர்
எப்போதும் சமாதானம் அன்பு அரவனைப்பு...

இன்னும் எவ்வளவோ உண்டு உம்மிடத்தில்
அதை நான் சொல்லாமல் இருந்தால்
கிடைக்காது ஆத்தும இரட்சிப்பு
தாய் தன் குழந்தையை இழந்து
தவிப்பது போல்
எங்களை எப்போதும் தேடி வந்து
அரவனைக்கிறீர்
என்றும் முடிவுறாது உமது அனைப்பின்
நேசக்கரம்....

இனிய நல்வாழ்த்துக்களுடன்
ஜெப ஊழிய பொறுப்பாளர்
**சகோதரர். சுகுமார்**

## அகர வரிசையில் என் இயேசு

அன்பு செய்பவரும் நீரே
ஆறுதல் தருபவரும் நீரே
இரக்கம் உள்ளவரும் நீரே
ஈகை கொண்டவரும் நீரே
உண்மை உள்ளவரும் நீரே
ஊரார் தொழுபவரும் நீரே
எங்கள் தெய்வமும் நீரே
ஏழைகளின் தகப்பனும் நீரே
ஐயம் தீர்ப்பவரும் நீரே
ஒருவராய் ஆள்பவரும் நீரே
ஓயாமல் இருப்பவரும் நீரே
ஔஷதம் தருபவரும் நீரே
அஃதே எங்கள் இயேசுவாம்

கிறிஸ்துவக்குள் அன்பு சகோதரன்
**P.பால்ராஜ்**

## Praise The LORD

## இயேசப்பாவுக்கு நன்றி மடல்

பூலோகம் உருவாகியே
மலைகள் தோன்றும் முன்
சுயம்புவாய் என்றும் நீரே
மாறா பராபரனே..

என்ன தவம் செய்தேன் இயேசுவே
எழுத்தினிலே உன் புகழ் வடிக்க
பண்ணெடுத்து பாடும் பொழுது
பாரினிலே துணை வருவீர்

கண்ணீரோடு இறைஞ்சுகையில்
கருணையோடு இரங்கிடுவீர்
எல்லா கதவுகளும் அடைக்கபட்ட நிலையில்
எனக்கென ஓர் கதவை நீர் திறந்துவிட்டீர்

சுற்றமெல்லாம் சுற்றமல்ல!
கொற்றவர் நீர்தான் என் சொந்தம்!!
நிழல் தேடும்என் நெஞ்சம்!
நின் பாதம் நான் தஞ்சம்

ஏட்டினில் நான் எழுதும் எல்லாம் நீரே!
பாட்டெடுத்து நான்பாடும் பாசுரமும் நீரே!

புகழுமின்றி புகழ்ச்சியுமின்றி
புவியினில் இருந்தோம்.. தனி தீவாய்
புகலிடம் கொடுத்தாய் இனி
புவியினில் நீயே என் தஞ்சம்!!!

அலைகடல் மனதை
அமைதிபடுத்தும் அரசன் நீயே!!
இதயவானத்தின் உச்சி சூரியன்
என்றும் நீயே!!!

வருத்தங்கள் வந்தால் உன் மடி தேடி வருவேன்
நீர் இன்றி போனால் நான் எங்கு போவேன்
இயேசுவே

எப்பொழுதும் உன் ஆசீர்வாதங்களை
நோக்கி ஏங்கிகிடக்கும்
ஏழை நெஞ்சம்
இயேசுவின் கிருபையால் மகிழ்ந்திடும் குடும்பம்!!!

கிறிஸ்த்துவுக்குள்
**ஹெப்சிபா ஸ்டீஃபன் குடும்பம்.**

# உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம்; ஏசாயா 54:17

செல்வி.விவிகா வில்சன்
சகோதரி.ஏஞ்சலின் டென்ஸி செல்பின்
செல்வி.ஆன் வாலன்டினா
செல்வி.ஸ்ரேய ஜெனட் ஜெயசேகர்
சகோதரி.ஜெனோபா
சகோதரி.அனுபா டேனியல்
சகோ.ஸ்டீபன்
செல்வி.ஜெர்ஸிகா சாமுவேல்
செல்வி.ஜெனிப்பர் ஜாண்சன்
சாகின் ரூபவ் சசி
சகோதரி. பிங்கி ஆல்வின்
சகோ. டேனியல் ராஜ்
செல்வி.பிரிந்தா லாசர்
செல்வன்.ஜோஸ்வா ஏஞ்சலோ
சகோதரி. நித்யா ஜெரேமியா
சகோதரி.பிரியதர்ஷினி ரிச்சர்ட்சன்
சகோதரி.சாந்தி இம்மானுவேல்
சகோ.பால்ராஜ் ஆமோஸ்
செல்வி.ரித்திக்ஷா பிரசாத்
சகோ.கமலதாசன்
செல்வி.பிரிஷ்சா விஜய் இம்மானுவேல்
செல்வன்.ரியெல் ஆஷ்கினாஸ் ஸ்டீபன்
சகோதரி.ரஞ்சிதா குமாரி எட்வின்






செல்வி.வின்சி எமிமா
செல்வி.ரோனுகா
செல்வி.அனைகா வில்சன்
செல்வி.ஜீயோனா ஷம்மி இயேசுரத்தினம்
சகோ.டேவிட் ஜெயக்குமார்
சகோ.சாம் ஆனந்த்
சகோ.பிபிட் செல்பின்
செல்வன்.ஸ்டார்வின் இன்பராஜ் பக்தராஜ்
சகோதரி.நகோமி எலிசபெத் ஜாண்சன்
சகோதரி.லீம்ஷியா ஜினு
செல்வன்.பிரைசன்
செல்வி. பவித்ரா ஜெனி ஜெகன்
சகோ.பால் அறிவுச்சுடர்
செல்வி.பியோனா சி.எஸ்.ஸ்வீட்லீன்
செல்வி.சானியோ ஜாப்பி ராபின்ராஜ்
சகோதரி.ஷீபா அருண் இம்மானுவேல்
செல்வி.ஷாலோம் ஜெனிப்பர் ஜெயசேகர்
செல்வன்.கெல்வீன் ஜாய் ஆரோக்கியராஜ்
செல்வன்.நிவின் ஜெர்வின் பிராங்கிளின்
செல்வி, ஜாஃப்னா ஞானசேகர்
சகோ.வில்சன்

**ஒரு வழியாய் உனக்கு எதிராகப் புறப்பட்டு வருவார்கள்; ஏழு வழியாய் உனக்கு முன்பாக ஓடிப்போவார்கள்.**
உபாகமம் 28:7

## இந்த மாதம் திருமண நாள் காண்பவர்கள்




திருமதி & திரு. சுனில் சுந்தர் ராஜ்
திருமதி & திரு. விஜயன்
திருமதி & திரு. ஜெயக்குமார்
திருமதி & திரு. வெங்கடேஷ் ஜெபராஜ்
திருமதி & திரு. தர்மர்
திருமதி & திரு. ஜெஸ்டின்
திருமதி & திரு. கிதியோன் பாலமுருகன்
திருமதி & திரு. ஆரோக்கியதாஸ்
திருமதி & திரு. சாமுவேல் தாசையா
திருமதி & திரு. பால்ராஜ் சேகரன்
திருமதி ரூ திரு. ஸ்டாலின் சுனில் வின்ஸ்



# 2019 நவம்பர் மாத திருச்சபையின் நிகழ்ச்சி நிரல்



## சகோதரிகள் ஐக்கிய கூடுகை

இடம் : ஜெபவீடு, பாஹில்   நாள்: 23-11-2019

நேரம் மாலை 6:30 முதல் 8:30 வரை



## வாலிபர்கள் ஐக்கிய கூடுகை

இடம் : ஜெபவீடு, பாஹில்   நாள்: 22-11-2019

வேதவினா : லேவியராகமம்.




## முழு இரவு ஜெபம்

இடம் : பரி பவுல் ஆலயம்  நாள்: 14-11-2019

நேரம் இரவு 10:00 முதல் 2:00 வரை

## ஞாயிறு ஆராதனை நேரம்
### மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 3.:11.:2019 | பாஸ்டர். ஆல்வின் ஜெபா - தமிழ் நாடு, கன்னியாகமரி | |
| 10.:11.:2019 | பாஸ்டர். ஆல்வின் ஜெபா - தமிழ் நாடு, கன்னியாகமரி | |
| 17.:11.:2019 | சகோ. பிராங்ளின் | சகோ.சுகுமார் |
| 24.:11.:2019 | பாஸ்டர். காலேப் ஜெயகுமார் | |

## வெள்ளி ஆராதனை நேரம்
### மாலை 4:00 முதல் 5:45 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 1.:11.:2019 | பாஸ்டர். ஆல்வின் ஜெபா - தமிழ் நாடு, கன்னியாகமரி | |
| 8.:11.:2019 | சபையின் 43வது, சிறுவர் பள்ளி 16வது ஆண்டு விழா | |
| 15.11.2019 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 22:11:2019 | பாஸ்டர். காலேப் ஜெயகுமார் | |
| 29:11:2019 | பாடல் குழுவினர் ஆராதனை - இடம் ஜெபவீடு | |

## சபையின் ஆராதனை ஒழுங்கு

வெள்ளிக்கிழமை
மாலை - 4.00 மணி முதல் 5.45 வரை
பரிசுத்த ஆராதனை
இடம்: பரி.பவுல் ஆலயம் - அஹமதி

ஞாயிற்றுக்கிழமை
மாலை - 5.00 மணி முதல் 6.15 வரை
பரிசுத்த ஆராதனை
இடம்: பரி.பவுல் ஆலயம் - அஹமதி

3-ம் வெள்ளிக்கிழமை
மாலை -4.00 முதல் 5.45 வரை
உபவாச திருவிருந்து ஆராதனை
இடம்: பரி.பவுல் ஆலயம் - அஹமதி

சனிக்கிழமை
மாலை - 3.00 முதல் 5.00 வரை
சிறுவர் வேதாகமப்பள்ளி
இடம்: ஜெபவீடு, பாஹில்

ஞாயிற்றுக்கிழமை
மாலை-7.30 முதல் 8.30 வரை
கேம்ப ஊழியர்கள் கூடுகை
இடம்:ஜெபவீடு, பாஹில்

செவ்வாய்க்கிழமை
மாலை - 6.30 முதல் 8.00 வரை
குடும்ப ஆசீர்வாத ஜெபம்
இடம்: ஜெபவீடு, பாஹில்

வியாழக்கிழமை
மாலை - 6.30 முதல் 8.30 வரை
பாடகர் குழு பயிற்சி
இடம்: ஜெபவீடு, பாஹில்

2-வது வியாழக்கிழமை
இரவு -10.00 முதல் 2.00 வரை
முழு இரவு ஜெபம்
இடம்: பரி.பவுல் ஆலயம் - அஹமதி

கிறிஸ்துவக்குள் அன்பான தேவ பிள்ளைகளுக்கு நமது சபையின் மூலமாக திக்கற்ற பிள்ளைகளை தாங்கும் ஊழியத்தை சகோ.கிறிஸ்டோபர்(69058529) அவர்களும் இந்திய தேச மிஷனரிகளை தாங்கும் ஊழியத்தை சகோ.பிரசாத் (60781168)அவர்களும் ஊழிய பொருப்பாளர்களாக இருந்து வருகிறார்கள் இந்த ஊழஜயங்களை காணிக்கை மூலமாக தாங்க விருப்பம் உள்ளவர்கள் இவர்களை தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

## சோதனையிலே கிறிஸ்துவின் பெலன்......

கிறிஸ்துவுக்கு பிரியமான சகோதர சகோதரிகளே, ஆண்டு விழாவினை கர்த்தருடைய ஆசீர்வாதத்தோடு ஆசரிக்க இருக்கும் அஹமதி தமிழ்த் திருச்சபை அங்கத்தினர் ஒவ்வொருவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்கள்.

நம்மில் அநேகருடைய வாழ்வின் நடக்கும் ஒருசில காரியங்களால் அநேகர் சொல்கிற ஒரு வார்த்தை ஏன் என்னை ஆண்டவர் சோதிக்கிறார் என்பதாக...

அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்தியருக்கு எழுதும்போது இப்படி சொல்கிறார்.

மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை, தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார். உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுவதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும் படியான போக்கையும் உண்டாக்குவார் என்று சொல்கிறார்.

சோதனையானது எதற்காக வருகிறது யார் இந்த சோதனையை கொண்டு வருகிறது என்று சிந்தித்து பார்த்தால் அநேக சத்தியங்களை நம்மால் அறிந்து கொள்ள முடியும். சோதனையிலே சிக்குண்டு அநேகர் ஆண்டவரை விட்டு பின்வாங்கி செல்வதை பார்க்கமுடிகிறது.

யாக்-1:13-ல் வேதம் இப்படியாக சொல்கிறது "சோதிக்கப்படுகிற எவனும் நான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக. தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல".

இந்த வசனத்தில் தேவன் நம்மை சோதிப்பவரல்ல என்று சொல்கிறது. அப்படியென்றால் யார் நம்மில் சோதனையை கொண்டு வருகிறான்.

வாலிப நாட்களில் ஆண்டவரோடு ஐக்கியம் கொள்ளவிடாதபடி ஆண்டவருக்கும் நமக்கும் தூரத்தை உண்டாக்கும் வகையில் பலவிதமான சோதனைகளை கொண்டு வந்து உலகத்தில் இச்சையில் நாம் மறந்து போகும்படி பிசாசானவன் பலவிதமான சோதனைகளை கொண்டு வருகி-றான். ஏனென்றால் ஒரு தனிமனிதன் ஆண்டவரோடு இருந்தால் பிசாசானவனுக்கு அவன் பார்வை எல்லாம் அவன் மேலிருக்கும் வேதமும் அப்படிதான் சொல்கிறது. 1-பேதுரு-5:8

பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடி சுற்றித்திரிகிறான்.

யோபுவை பார்த்து ஆண்டவரே சாட்சி கொடுக்கிறார் உத்தமனும் சன்மார்க்கனும் பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாகிய என் தாசனாகிய யோபு என்று சொல்கிறார். அப்படிப்பட்ட யோபுவை பிசாசானவன் அவன் ஆண்டவர் மேல் வைத்த அன்பு பொய் என நிரூபித்துக் காட்டலாம் என யோபுவின் சகல ஐசுவரியத்தையும், சொந்தங்களையும் அழித்தான். ஆனால் கர்த்தர் பிசாசிடம் யோபுவினுடைய ஜீவனைத் தொட அனுமதி கொடுக்கவில்லை.

யோபு சகலத்திலும் அவரைப்பற்றி குறை சொல்லாமல் என்னடைய உயிர் பிரிந்தாலும் (அவர் என்னைக் கொன்று போட்டாலும் கர்த்தர் மேல் நம்பிக்கையாயிருப்பேன்" யோபு-13:15) என்று சோதனையை ஜெயித்தான் என்று பார்க்கமுடிகிறது.

ஆதியாகமம் புஸ்தகத்திலே யோசேப்பைக் குறித்து பார்க்கும் போது அவன் ஒரு பரிசுத்தவானாய் வாழ்ந்து வந்தான். அவனாலும் அவன் எஜமானுடைய மனைவி அவன் மேல் கண் வைத்து அவனை அழைத்த போதும் பரிசுத்தம் கெடாதபடி அப்படிப்பட்ட சோதனையில் அகப்படாதபடி "தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்வது எப்படி (ஆதி-39:7) என்று கூறினான்.

அவன் சகல சோதனையிலும் அகப்படாதபடி தன் இருதயத்தை எல்லாக் காவலோடும் காத்துக்கொண்ட படியால் கர்த்தர் அவனை உயர்த்தி பிரதம மந்திரியாக வைத்தார் என்று பார்க்கமுடிகிறது.

சோதனை மனிதனுக்கு அதிகமாக வரத்தான் செய்யும் ஆனால் வேதம் சொல்கிறது "சோதனையை சகிக்கிற மனுஷன் பாக்கியவான்" என்று.

ஆதாம் ஏவாளை பிசாசானவன் சோதித்தான் அவர்கள் சிக்குண்டு சாபத்தை தேடிக்கொண்டார்கள் என்று வேதத்தில் பார்க்க முடிகிறது.

நீதிமொழிகள் 17:3-ல் சொல்லபடுகிறது, வெள்ளியை குகையும், பொன்னை புடமும் சோதிக்கும். இருதயங்களை சோதிக்கிறவரோ கர்த்தர் என்று சொல்லப்படுகிறது. எந்த சூழ்நிலையிலும் என் அன்பு மகன் மகள் என்னோடு இருக்கிறாளா என்று ஆர்வமுடன் அனைத்தையும் சோதிக்கிறார். பிசாசு உங்களை மேற்கொள்வது போல தோனலாம். நம்மை கைவிடாத தேவன் நம்மோடு இருப்பார். அத்தகைய சூழ்நிலையில் நாம் தப்பித்துக் கொள்ளும்படியான போக்கையும் நமக்கு உண்டாக்குவார்.

மீகா தீர்க்கதரிசி சொல்கிறார், என் சத்துருவே எனக்கு விரோதமாய் சந்தோஷப்படாதே நான் விழுந்தாலும் எழுந்திருப்பேன். நான் இருளிலே உட்கார்ந்தால் கர்த்தர் எனக்கு வெளிச்சமாயிருப்பார். இப்படிப்பட்ட விசுவாசத்தைக் கொண்டு சோதனையை வென்று காட்டுவோம். கர்த்தர் தாமே யாவரோடும் கூட இருப்பாராக. ஆமென்

வாலிபம் இயேசுவுக்கே.

திருச்சபை வாலிப ஐக்கிய குழு

## வாழியே நீர் நீடூழி ...

அன்டம் படைத்து ,ஆதாம் படைத்து
இன்பம் படைத்து ,ஈகை படைத்து
உயிர் படைத்து,ஊடல் படைத்து
எண்ணம் படைத்து,ஏற்றம் படைத்து
ஐயம் படைத்து,ஒற்றுமை படைத்து
ஓடம் படைத்து,ஔஷதமாய் நீர் தந்த வேதம் என்கிற
ஆயுதம்ஏந்தி அக்கறையில் சேர்த்திட
அஹமதியில்

'43 " ஆண்டுகள் அளவில்லா ஆண்டுகளை
ஆண்டு கொள்ள உம் பிசன்னமும், மாறா
நித்திய கிருபையும், உம்மோடு அனுதினமும்
சேர்ந்திடும், நாழிகையும், நாட்களும்,
ஆண்டுகளும் தொய்ந்திட வாழ்யே நீர் வாழியே நீடூழி ...
என வாழத்தி அஹமதி தமிழ் ஆலயத்தின்
ஆயுசை ஆர்பரிக்க கிருபை செய்த இயேசுவே
உமக்கு ஸதோத்திரம் உண்டாவதாக
இப்பொழுதும் எப்பொழுதும் ஆமென்!!!

கிறிஸ்துவுக்குள் சபையின்
விசுவாச குடும்பம்

மு. எபினேசர்
அவர்கள் குடும்பம்

அஹமதி தமிழ் திருச்சபையின் அனைத்து விசுவாச குடும்பங்கள் அனைவருக்கும் செயற்குழு சார்பாக 43 ஆம் ஆண்டு நிறைவு விழா நல்வாழ்த்துகளை தெரிவித்து கொள்கிறோம்.

## தேவ நாம மகிமை

### 1. காலையில் எழுந்த உடன்

காலையில் எழுந்த உடன் முதலாவது நாம் தேட வேணடியது தேவ ஐக்கியமே
காலையில் எழுந்த உடன் முதலாவது நாம் சந்திக்க வேண்டிய நபர் தேவனே
காலையில் எழுந்த உடன் முதலாவது நாம் பேச வேண்டிய சத்தம் தேவ சத்தமே
காலையில் எழுந்த உடன் முதலாவது நாம் உண்ண வேண்டிய உணவு தேவனின் திருவார்த்தையாகிய அப்பமே. . .

### 2. எங்கோ ஒரு குரல்

என் கற்பனைகள் கால்கள் இழந்தன வருடங்கள்,
என் சோகங்களுக்கு தீனி போட்டன என் பெயரையே,
மறக்கபட்ட இந்த வனாந்தரத்தில் எங்கோ ஒரு குரல்
பெயர் சொல்லி அழைத்தது களைகளை
களைளந்தேன் இயேசுவை நோக்கி என் கால்கள்
பாய்ந்து சென்றன. . .

### 3. குண நலன்

நேசிப்போரை நேசிப்பது கடமை
வெறுப்போரை நேசிப்பது அன்பு . . .
தந்தவருக்கு கொடுப்பது நியாயம்
தாராதவருக்கு கொடுப்பது தர்மம் . . .
இருப்பதால் கொடுப்பது தாராளம்
இல்லாமையிலும் கொடுப்பது தளராக்குணம் . . .
பிறரை அறிந்து கொண்டவன் புத்திமான்
தன்னை அறிந்து கொண்டவன் பக்திமான் . . .
நல்லதை செய்கிறவன் பக்திமான்
நல்லவனாய் இருந்து கொண்டு
நல்லதை செய்கிறவன் பரிசுத்தவான் . . .

கிறிஸ்துவக்குள் அன்பு சகோதரி
எழிலரசி டேனியல்ராஜ்

SHENAYIM MINISTRIES
WORD TO THE WORLD
Jublin Joseph
8015 749 129

கிறிஸ்துவுக்குள் அன்பான அஹமதி திருச்சபைக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்

43 ஆண்டுகளை கடந்து 44 ஆம் ஆண்டிற்குள் பிரவேசிக்கிறீர்கள் உங்களுக்கு மிண்டுமாய் என் உள்ளத்தின் ஆழத்தில் இருந்த அன்பின் வாழ்த்துக்கள் தெரிவித்து கொள்கிறேன்.

இஸ்ரவேலர்கள் எகிப்த்திலிருந்து கானானுக்குள் செல்லும் போது 42 பாளையங்களை கடந்து சென்றார்கள் . இந்த பாளையங்களை கடந்துதான் கானானுக்குள் பிரவேசித்தார்கள். இஸ்ரவேலர்கள் கானானை நாடிச் சென்றார்கள். அதன் ஆசீர்வாதங்களை அனுபவிக்க ஆசைபட்டார்கள். அதை போல் கர்த்தர் இன்ஜறக்கு அஹமதி தமிழ் திருச்சபையினரை 43 ஆண்டகளை கடக்க பண்ணி இருக்கிறார். இப்பொழுத நீங்கள் கானானுக்குள் பிரவேசிக்கிறீர்கள் என்று நான் சொல்ல விரும்பவில்லை ஏனெனில் புது உடன்படிக்கைக்கு உட்பட்டு கிறிஸ்துவின் விலையேற பெற்ற இரத்தத்தினால் கழுவபெற்றிருக்கின்ற உங்களையே ஒரு கானானாகத்தான் கர்த்தர் வைத்திருக்கின்றார். உங்களுக்குள் வருகின்றதெல்லாம் ஆசீர்வதிக்கபடும்.

உங்கள் எல்லகைக்குள் இருகின்றவர்கள் எல்லோரும் ஆசீர்வதிக்கபடுவார்கள். நீங்கள் ஆசீர்வாதத்தை தேடி செல்பவர்களாக இல்லாமல்  நீங்களே அநேக ஆயிரங்களுக்கு ஆசீர்வாதமாக இருப்பீர்கள்.

குவைத் அஹமதி திருச்சபையும் அதன் விசுவாசிகளும் உலக ஜனங்களுக்கு ஒரு கானானை போல இருப்பீர்கள் உங்கள் பிள்ளைகள் அநேக தேசங்களுக்கு ஆசீர்வாதமாய் இருப்பார்கள். ஜீவ தண்ணீருள்ள நதிகள் உங்களிடத்திலிருற்து புறப்பட்டு போகும். உங்கள் எல்ஜலக்குள் சமாதானம் பெருகி இருக்கும் உங்க துக்க நாட்கள் முடிந்து போயிற்று இனி வரும் நாட்களில் அநேகருடைய துக்கத்தை நீங்கள் ஆற்றுவீர்கள் என்று சொல்லி உங்களை வாழ்த்துகிறேன்

கர்த்தர்தாமே உங்கனைவரோடும் இருப்பாராக

கிறிஸ்துக்குள் உங்கள் அன்பு சகோதரர்

Bro. Jublin Joseph.



Regards,

Jublin Joseph,
Shenayim Ministries

jublinliveinword@gmail.com
124/1/186G, East Street, KattuParamakudi, Paramakudi Taluk, Ramnad District, Tamil Nadu, India, 623707



கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர சகோதரிகளுக்கு ஆண்டவரும் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் என் அன்பின் வாழத்ததுக்கள்

43 ஆம் ஆண்டு விழா கானும் அஹமதி தமிழ் சபை குடும்பத்தினர் யாவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்கள் என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன். (எரேமியா ३३:३)

தேவனை நோக்கி கூப்பிடுகிற யாவருக்கும் தேவன் பதில் தந்து, நம்முடைய சிந்தனைக்கும் அறிவிற்கும் எட்டாத காரியங்களை செய்கிற தேவனாய் இருக்கிறார்.

எகிப்த்தியர்கள் தங்களுக்கு பின்னே வருகிறதை கண்டு மிகவும் பயந்தார்கள் அப்பொழுத இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கி கூப்பிட்டார்கள். ( யாத் 14:10 -20) தேவனாகிய கர்த்தர் இஸ்ரவேலின் கூப்பிடுதலை கேட்டு சிவந்த சமுத்திரத்தை பிளந்த இஸ்ரவேல் புத்திரர் சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே நடந்து போக செய்தார். அதிசயமான காரியங்களை செய்து தம் ஜனங்களை விடுவித்தார்.

ஆண்டவரே உமக்கு சித்தமானால் என்னை சுத்தமாக்க உம்மால் ஆகும் என்றான், இயேசு தம் கையை நீட்டி எனக்கு சித்தமுண்டு சுத்தமாகு என்று சொல்லி அவனை தொட்டு சுத்தமாக்கினார். ( மத் 8:1-3)

இரண்டு குருடர் அவர் பின்னே சென்று தாவிதின் குமாரனே எங்களுக்கு இரங்கும் என்று கூப்பிட்டார்கள் அவருடைய கண்களை அவர் தொட்டு உங்கள் விசுவாசத்தின் படி உங்களுக்கு ஆக கடவது. என்று சொல்லி அவர்களுக்கு பார்வையை கொடுத்தார். (மத் 9:27-30)

அவரை நோக்கி நாம் கூப்பிடும் போது, அவர் நமக்கு உத்தரவு கொடுத்து அவர் அறியாததும் நமக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை நமக்கு செய்வார்

சபையின் ஆண்டு விழா கொண்டாடும் நாம், சபையின் காரியங்களுக்காக,பிள்ளைகளின் ஆசீர்வாதங்களுக்காக, சுகத்திற்காக,இரட்சிப்பிற்காக ஜெபிக்கின்ற நாம் தேவன் நம்முடைய ஜெபங்களுக்கு பதில் தரும் நாளில் அவருடைய மகிமை நம் வாழ்க்கயைின் மூலமாக வெளிப்படும், தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை, நம் வாழ்க்கையில் மலைபோல் உள்ள பிரச்சனை ஜெபம் தகர்த்து போடும்

எங்கள் குடும்பத்தின் சார்பாக சபை அங்கத்தினர் யாவருக்கும் எங்கள் அன்பின் வாழ்த்துக்கள்!

கிறிஸ்துவின் பணியில்






அன்பு சகோதரர் ப.அருள்சாமுவேல்

திருவண்ணாமலை




## நான் எம்மாத்திரம்




கிறிஸ்துவக்குள் மிகவும் அன்பான அஹமதி தமிழ் திருச்சபையின் உடன் பிறவா சகோதர சகோதரிகளுக்கு ஸ்தோத்தரிக்கப்பட்ட தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் செய்திமலர் ஊழியத்தின் மூலம் அன்பிற்கினிய என் குடும்ப உறுப்பினர்கள் சார்பில் ஆண்டு விழா வாழ்த்துக்கள்

சங்கீதம் 8-4முதல்9 வசனத்தின் படி எவ்வளவு பெரிய தேவன் அவர் என் மேல் நினைவாய் இருப்பதற்கு நான் எம்மாத்திரம் ஆண்டவரே இன்றைக்கு நாம் பார்க்கும்போது நம்மில் சிலர் மகா பெரிதாக மனிதராக காட்டிக்கொள்வதாக பார்க்கிறோம் பெருமைப்படுத்திக்கொள்வதை பார்க்கிறோம்! நாம் அனைவருமே விமானத்தில் பிரயாணித்த வந்தவர்கள்தான் ஒரு விமானம் எழும்பும்போது ஒரு சில அடிகள் மேலே செல்ல செல்ல பார்வைக்கு ஒவ்வொன்றாய் மறைந்து மேக மண்டலத்திற்குள் மறைந்து விடும் நம் கண்ணுக்கு ஒன்றுமே தெரியாது அப்படிபட்டவர்களாகிய நாம் இப்பூமியில் ஒன்றுமல்ல ஆனால் ஆண்டவர் நம்மை நினைக்கிறார் அதற்கு நான் எம்மாத்திரம் இந்த பூமியில் நான்கில் மூன்று பகுதி தண்ணீர் கடல் பயணத்தில் அப்படித்தான் போக போக மனிதர்கள் கட்டிடங்கள் மறைந்து பெரும் தண்ணீர்தான் கண்ணுக்கு தெரியும் அந்த நேரத்தில் எதாவது விபரீதம் நேர்ந்தால் ஒன்றும் செய்ய இயலாது ஆனால் கர்த்தர் நம்மை நினைக்கிறார் அதற்கு நான் எம்மாத்திரம் 2சாமுவேல் 7-18 அப்பொழுது தாவீதுராஜா உட்பிரவேசித்து, கர்த்தருடைய சமூகத்திலிருந்து: கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் என்னை இதுவரைக்கும் கொண்டுவந்ததற்கு, நான் எம்மாத்திரம்? என் வீடும் எம்மாத்திரம்? எங்களை இதுவரைக்கும் கொண்டுவந்ததற்கு நாம் எம்மாத்திரம் நான் எம்மாத்திரம் ஆண்டவரே! எங்களை நீர் நினைத்து மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டி காட்டு மிருகங்களையும் ஆகாயத்து பறவைகளையும் சமுத்திரத்தின் மச்சங்களையும் கடலில் சஞ்சரிக்கிறவைகளையும் எங்களுக்கு கீழ்படுத்தி எங்களை நீர் நினைப்பதற்கு நாங்கள் எம்மாத்திரம் ஆண்டவரே இம்மட்டும் நடத்தி வந்த தேவனை துதிப்போம் ஆமென்!!

கிறிஸ்துவக்குள் அன்பு சகோதரன்

திரு.ஐசக்துரை

## 43–ஆம் ஆண்டு வாழ்த்து

43–ஆம் ஆண்டு சிறப்பு விழா காணும் அஹமதி
சபையே!
நீ! வாழ்க வாழ்க பல்லாண்டு வாழியவே!
இன்னும் பல நூற்றாண்டு நீ கண்டு
என் தலைமுறை பல உனைக்கண்டு
மா மலை போல் மங்காமல் – என்றும்
நீ! வாழ்க வாழ்க வாழியவே!

பரிசுத்த நகரமே! அஹமதியே! நீ பாக்கியம் பெற்றாய்
பாரெல்லாம் பரவுது உன் புகழ்
பாசமாய் நல் நேசமாய் – நீ
இதயத்தை வருடும் இசைபோல் – அதற்குள்
மகிமை இறங்கும் மலைப் போல்!
மேலானதை சுதந்தரிக்கும் இடமாய்
மணம் கமழும் மலர் போல்!
பின்மாரி பெய்யும் இடமாய்– எமை
உம் உலகம் சேர்க்கும் பேழையே!
நீ! வாழ்க வாழ்க வாழியவே!

புல்லாங்குழலுக்குள் புகுந்த இரைச்சல் இசையாடும்!
உனக்குள் தஞ்சம் புகும் எவரும் பரிசுத்தவான்களே!
எனம் வாழ்க்கைச் சக்கரத்தின் அச்சாணியும் நீதான்!
நீ இன்றி முச்சாணும் நகராது எம் வாழ்வு!
ஆணிவேராய் நீ இருக்க நான் ஏன் அசைய வேண்டும்
எமக்கு பலமும் நீதான்! பலத்த துருகமும் நீதான்!
உன்னிடம் வந்தால்!

புத்திக்கும் ஆத்துமாவிற்க்கும் விருந்தாம்
முதிர்வயதிலும் கனிகொடுக்கலாம்
வற்றாத ஜீவ ஊற்றைப் பருகலாம்
மாறாத மன்னாவை உண்ணலாம்
பேரின்ப நதியில் குளிக்கலாம் – எம்
நிகரிலா அஹமதி திருச்சபையே!
நீ! வாழ்க வாழ்க பல்லாண்டு வாழியவே!

தூண்களைத் தாங்கும் பூமி போல்
நமை ஜெபத்தில் தாங்கிடும் அஹமதி சபை!
தனி ஒருவருக்கு வேதனை என்றால்
படை எடுத்து ஆறுதலட சொல்லும் அங்கள்கள்!
பிறப்பிலும் சிறப்பிலும் முன் நிற்பது எம் சபை!

வாஞ்சை உள்ளவர்கள் வாருங்கள் என
வருந்தி அழைக்கும் தாய் – எமை
திறம் பெற செதுக்கும் சிற்பி நீ தான்!

வாருங்கள் ஊக்கமாய் ஜெபிப்போம்
உண்மையாய் இருப்போம்
வளர்த்திடுவோம் செம்மொழியில்
இச்சபையை இம்மண்ணில்!
என்னும் தனிப் பெருமையில் –
மங்காமல் சிறப்பாய் வாழ உம்
திருவடி பணிந்து வாழ்க என வாழ்த்துகிறோம்
நீ! வாழ்க வாழ்க பல்லாண்டு வாழியவே!

கிறிஸ்துவுக்குள் அன்பான

**சகோ. சதீஷ் அவர்களின் குடும்பம்**

## வாலிபர் ஐக்கிய குழு ஆண்டு விழா வாழ்த்துக்கள்

அகவை 43ஐ தொட்டு ஆலமரமாய் வேரூன்றி நிற்பது நம் சபை !!! கிளைமரமாய் பல சபைகள் இத்தேசத்திலே!!! கண்ணீரோடு வந்த பலரின் கண்ணீரைத் துடைத்து மெய்யான வழியை காட்டியது நம் சபை அனாதையாய் வந்தவர்களுக்கு பல உறவு–களை அடையாளம் காட்டியதும் நம் சபை, ஆத்துமா அறுவடைக்கு கேம்ப் ஊழியம், குடும்பங்களை கட்டி எழுப்ப குடும்ப ஜெபம், தேசத்திற்க்காய் திறப்பில் நிற்க இரவு ஜெபம், வாலிபர்களை உற்சாகப் படுத்தத வாலிபர் கூட்டம், பெண்களின் ஐக்கியத்திற்காக பெண்கள் கூட்டம், சிறுவர்களுக்காக பாலர் சங்கம் (சண்டே ஸ்கூல்), திக்கற்றவர்களுக்கு மிஷினரிகள் என் பலரை தாங்க காணிக்கை இப்படி குன்றின் மேல் விளக்காய் கலங்கரை தீபமாய் திகழும் எங்கள் சபையே நானும் உன் பிள்ளை என்பதில் அகமகிழ்கிறேன்.

இயேசுவின் வருகைவரைக்கும் நிலைத்து நின்று அநேகருக்கு அடைக்கலம் தந்திட வணங்குகிறோம்.

வெறும் கையாய் வந்த என்னை ஆசீர்வாதங்களால் நிரப்பி பலவான் கையிலுள்ள அம்புகளுக்கு ஒப்பாக்கி வனைந்தெடுத்த நம் சபைக்கு 43வது அகவை தின வாழ்த்துக்கள்.

குடும்பத்தினை பிரிந்து வந்த நமக்கு! ஒரு தாயின் பிள்ளைகளாய் தேவ அன்பிலும், பரிசுத்த ஆவியா–னவரின் நடத்துதலிலும், சகோதர சிநேகிதத்திலும் நாளுக்கு நாள் ஐக்கியப்பட்டு அவரில் வளரும்படிக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தந்த மகத்தான குடும்பம்தான் நமது அஹமதி தமிழ் திருச்சபை.

**திருச்சபை வாலிபர் குழுமம்**

## நீரே என் சொந்தம்

என் இதயத்தில் நீங்கா இடம் பிடித்த என் அன்பு அஹமதி தமிழ் திருச்சபையே உன் பிறந்த நாட்களை நினைவு கூறும் போதெல்லாம் உன்னை உருவாக்கிய எங்கள் முற்பிதாக்களை நினைக்கிறேன். ஏனென்றால் இப்படிப்பட்ட ஒரு நல்ல சபையை எங்களுக்கு தந்த அவர்களுக்கு நன்றி சொல்கிறேன், அவர்களை என் ஜெபத்தில் நினைக்கிறேன். என் உள்ளம் கொழுந்து விட்டு எரிகின்ற நல்லவைகளை நினைவு படுத்துகிறேன். நீர் நல்லவைகளைத் தந்து நல்லொழுக்கம் பேணி நல் உறவு மதித்து நல்ல உறவுகளைத் தந்து சுவிசேஷ நற்செய்தி பறைசாற்றி இல்லாருக்கு உதவி செய்து நல்லோர் பலர் உன்னைப் போற்றி துதிக்க எங்கள் இல்லத்தில் இன்பமும் உள்ளத்தில் மகிழ்வும், செழிப்பும் என்றும் தந்து எங்கள் குறைவை நிறைவாக்கிய நீர் 43 ஆண்டுகள் செய்த சாதனையைப் போல் இன்னும் பல ஆண்டுகள் சிறப்புடன் வாழ்ந்து வாழ்வின் துக்கத்தை சந்தோஷமாக மாற்ற நீர் என்றும் பல்லாண்டு வாழ்க! வாழ்க! என்று வாழ்த்தும்.

**பிரிசில்லா செங்குட்டுவன் குடும்பத்தினர்**





Pastor C. Alwin Jeba
MESSIAH MIRACLE MINISTRY
MEKKAMANDAPAM P.O
K.K DIST -629166
TAMILNADU
MOBILE- 9952201760 / 8220800706

அன்பிற்கினிய அஹமதி தமிழ் திருச்சபை பொறுப்பாளர்கள், விசுவாசிகள் அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் (43) ஆண்டு விழா வாழ்த்துக்களை கூறிக்கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

கடந்த (42) ஆண்டுகளாக ஆண்டவராகிய தேவன் ஊழியத்தையும் உங்கள் குடும்பங்களையும் மிகவும் அற்புதமாக, ஆச்சரியமாக வழிநடத்தி வந்ததை நினைத்து ஆண்டவரை துதிக்கிறேன்.

ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும் எண்ணிமுடியாத அதிசயங்களை அவர் செய்கிறார். உங்கள் ஊழியத்திற்கும், திருச்சபைக்கும், ஊழியர் மற்றும் பொறுப்பாளர்களுக்கும், விசுவாச பெருமக்களுக்கும் ஆண்டவர் பெரிய காரியங்களை செய்வார். மோசே உன்னைக் கொண்டு செய்கிற காரியம் பயங்கரமாயிருக்கும். (42) ஆண்டுகளாக, பயங்கரமான, பெரிய காரியத்தை செய்த ஆண்டவர் இனி வருகின்ற ஒவ்வொரு ஆண்டும் பெரிய காரியத்தை செய்வார்.

மீகா 2:13-ன் படி இந்த (43) வது ஆண்டு விழாவிலும் ஒவ்வொரு வருடத்திலும் தடைகளை உடைத்தெறிந்து ஊழியங்களையும், தேவபிள்ளைகளையும் வழி நடத்தி செல்லுவார்.

எங்களுடைய ஊழியத்தின் சார்பாக வாழ்த்துக்களை கூறிக்கொள்கிறேன்.

இப்படிக்கு ஆண்டவரின் சேவையில்
உங்கள் சகோதரன்
**C.ஆல்வின் ஜெபா**

## அஹமதி தமிழ் திருச்சபை என்னும் தேவராஜியம்

தொலைந்துபோன ஆடு நான்
தேடிவந்த மெய்பன் நீர்

திக்கற்று அலைந்தேன் நான்
பரிதவித்தீர் எனக்காய் நீர்

உம்மை அறியாமல் இருந்தேன் நான்
பரிவாக பார்த்தீர் நீர்

பாவ சேற்றில் உழன்றேன் நான்
பரிகாரி ஆனீர் நீர்

இரட்சிப்பை பெற்றேன் நான்
மனமகிழ்ச்சி அடைந்தீர் நீர்

குடும்ப வாழ்வில் இணைந்தேன் நான்
இரண்டு சுதந்தரத்தை கொடுத்தீர் நீர்

குவைத் தேசத்திற்கு வந்தேன் நான்
எனக்கு முன்பாக சென்றீர் நீர்

பல முறை சோர்ந்தேன் நான்
மார்போடு அனைத்தீர் நீர்

குடும்பத்தோடு வாழ்கிறேன் நான்
இது என் சித்தம் என்றீர் நீர்

அஹமதி சபையோடு இணைந்தேன் நான்
அமர்ந்த தண்ணீர் என்று சொன்னீர் நீர்

ஊழியம் செய்யாமல் வாழ்ந்தேன் நான்
அதை செய்யும்படி சொன்னீர் நீர்

ஞானவான் இல்லை நான்
பெயர் சொல்லி அழைத்தீர் நீர்

இப்படி எங்களை உருவாக்கின அஹமதி தமிழ் திருச்சபை என்னும் தேவராஜியம் கர்த்தருடைய வருகை மட்டும் நிலைத்திருக்க வாழ்த்தி வணங்கி ஜெபிக்கின்றோம் உங்களின் அன்பு குடும்பம்

**பிசாத் ஷீபா**

## அழகிய தோட்டம்

அழகிய குவைத் என்னும் பூங்காவில்
ஆலமரம் என்னும் சபையில் நிழலில்
வண்ண பூக்களாய் பூத்திருக்கும்
அன்பு அஹமதி திருச்சபையின்
ஒலிவ மர கன்றுகளான சகோதரர்களே
லீலி பூக்களான சகோதரிகளே
மொட்டுகளான பிள்ளைகளே
உங்களுடன் பங்கு பெறவும்
அபிஷேகம் எனும் எண்ணையையும்
சத்தியம் என்னும் நீரையும்
தேவனுடைய வார்த்தையால் வெளிபடுத்த
அன்போடு என் தந்தையை அழைத்து வாய்ப்பளித்த
அனைவருக்கும் நன்றி என்றும் மனம் வீச
இயேசு கிறிஸ்துவின் நாமத்தில்
நானும் வாழ்த்துகிறேன்
மன நிறைவோடு
அஹமதி தமிழ் திருச்சபையை !!!

போதகர் ஆல்வின் ஜெபா அவர்களின்

**அன்பு மகள் – அஷ்நாத்**

கிறிஸ்துவுக்குள் அன்பான தமிழ் திருச்சபையார் அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் 43 வது ஆண்டின் வாழ்த்துக்களை மினா அப்துல்லா கேம்ப சகோதரர்கள் சார்பில் கூறி கொள்வதில் பெருமகிழச்சி அடைகிறோம்

**மினா அப்துல்லா**
**கேம்ப் சகோதரர்கள்**

**PRAISE EVANGELICAL CHURCH**
No.2/632, Gowri Nagar, Mugalivakkam, Chennai - 600 125.
Email :joshsteve777@yahoo.com, Mobile :09840196826

Pastor.K.Joshua Stephen
Senior Pastor

Date: 25-10-2019.

**கிறிஸ்துவுக்குள் அன்பான அஹமதி தமிழ் திருச்சபையின் சபையின் ஊழியர், செயலாளர், மற்றும் நிர்வாக குழு உறுப்பினர்கள் மற்றும் திருச்சபையினர் அனைவருக்கும், இயேசு கிறிஸ்துவின் இணையற்ற நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.**

**திருச்சபையின் 43 ஆம் ஆண்டு மற்றும் ஞாயிறு பள்ளியின் 17 ஆம் நிறைவை காணுகின்றதை குறித்து கர்த்தருக்குள் மகிழ்கின்றேன் வருஷத்தை நன்மையால் முடிசூட்டுகிறார் என்ற வேத வாக்கியத்தின்படி இம்மட்டும் நன்மையாக நடத்தி வந்த தேவாதி தேவனை துதிக்கிறேன் எபிரேயர் 6:10ன்படி உங்கள் கிரியையையும், நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியுஞ் செய்ததினாலும் செய்து வருகிறதினாலும் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்துவிடுகிறதற்குத் தேவன் அநீதியுள்ளவரல்லவே.**

**திருச்சபையாக நீங்கள் செய்த கிரியையாகிய ஏழைகளுக்கு உதவிகள் செய்வதையும், மற்றும் தேவ ஊழியர்களை கனப்படுத்தியதையும், ஊழியம் செய்து வருகிறதை மறந்து விடுவதற்கு நம்மடைய தேவன் அநீதியுள்ளவர் அல்ல, என்பதை திருச்சபையின் வளர்ச்சியிலும், சபையார் உங்களுடைய ஒவ்வொருவருடைய வாழ்க்கயிலும், கர்த்தர் நடத்திவருகிறதை பார்த்து துதிக்கிறேன்**

**வருகிற புதிய ஆண்டிலும் தேவனாகிய கர்த்தர் எபிரேயர் 6:14ன்படி நிச்சயமாவே உன்னை ஆசிர்வதிக்கவெ ஆசீர்வததித்து உன்னை பெருகவே பெருக பண்ணுவேன். என்கிற வாக்குத்தத்தம் மூலம், திருச்சபையின் தேவ ஆசீர்வாதத்தையும், பெருக்கத்தையும் காண செய்வாராக, திருச்சபை ஊழியத்திலும், மற்றும் ஞாயிறு பள்ளி ஊழியத்திலும் வருகிற ஆண்டிலிருந்து கர்த்தர் ஆசிர்வதித்து பெருக செய்வாராக! எங்கள் திருச்சபையின் சார்பாகவும், கடும்பத்தின் சார்பாகவும், உங்களை வாழ்த்துகிறோம்.**



இப்படிக்கு
கிறிஸ்துவின் பணியில்

(பாஸ்டர் K. ஜோஸ்வா ஸ்டீபன்)

Branch: Pastor K.Isaac Raja
Flt No. 100,surya Annexe ,
Natham, Kundrathur, Chennai-600069.

Mobile - 9840196826 / 9840277144
www.facebook.com/praiseevangelicalministries
Email - joshsteve777@yahoo.com

# சபையின் செயற்குழு மற்றும் ஊழிய பொருப்பாளர்கள்



சபையின் விதிமுறை கண்காணிப்பாளர்
சகோ. ஜெயசேகர்
66442727

சபையின் பாடல் குழு ஊழியம்
சகோ.இயேசுரெத்தினம்
97252279/97545812

சபையின் செய்தி மலர் ஊழியம்
சகோ.ஜசக்துரை
66015503

சபையின் போக்குவரத்து ஊழியம்
சகோ.ஜான்ஸன்
97610275

சபையின் மிஷனரி ஊழியம்
சகோ.பிரசாத்சுந்தரம்
60781168

சபையின் இணையதள ஊழியம்
சகோ. ஜினு
97171529

சபையின் ஊழியர்
சகோ. ஸ்டாலின்
66021072

சபையின் செயலாளர்
சகோ.ஆரோக்கியதாஸ்
99870126

சபையின் பொருளாளர்
சகோ.எபிநேசர்
50203472/23922058

சபையின் பெண்கள் ஐக்கிய தலைவி
சகோதரி.பியூலா ஜெகநாதன்
60797360

சபையின் வாலிபர் ஐக்கிய தலைவர்
சகோ.ஆரோக்கியராஜ்
66159784

சபையின் கணக்கு தணிக்கையாளர்
சகோ.அசோக்குமார்
66826647

சபையின் ஜெப ஊழியம்
சகோ.சுகுமார்
66579514

சபையின் கேம்ப் ஊழியம்
சகோ.கிருஸ்டோபர்
99387644

சபையின் ஓய்வு நாள்
பாடசாலை ஊழியம்
சகோதரி. செலின்டேவிட்
99368775

சபையின் திக்கற்ற பிள்ளைகள் ஊழியம்
சகோ. கிருஸ்டோபர் M
69058529


பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்
அஹமதி தமிழ் திருச்சபை